# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2209/14 - 2021 ජනවාරි මස 04 වැනි සඳුදා - 2021.01.04

*2209/14 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47 (1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020, ஒகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு, 2021, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2021, சனவரி 04.*

(1) அவ்வறிவித்தலில் இல. "9.3 திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பின் கீழுள்ள "02. அதிவிசேட முன்னுரிமைகள்" என்பதன்கீழ் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்-

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

16. தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனக் கட்டமைப்புகளைக் கற்றாராய்ந்து தற்போதுள்ள பௌதிக வளங்களை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி, உரிய மாவட்டத்தின் உற்பத்திப் பிரிவுகளுக்குத் தேவையான நிபுணத்துவத்தை மேம்படுத்தி, வேலைவாய்ப்புச்



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

சந்தர்ப்பங்களுக்குத் தேவையான பட்டங்களைப் பெறும் உயர் கல்வி நிறுவனங்களாக நகர பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

17. 2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேசிய புத்தாக்கங்கள் முகவராண்மைச் சட்டத்துக்கு ஏற்றவாறு தேசிய புத்தாக்கங்கள் நிறுவனத்தைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

18. வெற்றிகரமான தொழில்முனைவு மற்றும் வருமானம் ஈட்டும் கருவியொன்றாக தொழில்சார் தொழில்நுட்பக் கல்வியைச் சாத்தியமானவாறு விரிவுபடுத்தி, அதை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவருவதற்கும், தீவின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கியவாறு தொழில்கல்விப் பிரவேசத்துக்கான சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்துவதற்காக நடமாடும் தொழில்நுட்பக் கல்விச் சேவைகளை அறிமுகப்படுத்துதல்.

01-265

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.